*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.144/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.கிருஷ்ணமூர்த்தி த/பெ. செங்கோடன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.03.2024.**

துவக்க நேரம் 10.58

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செல்லியம்பாளையத்தில் உள்ள லட்சுமணசமுத்திரம் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.01.2022ம் தேதிநான் சீலியம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் இரவு சுமார் 09.00 மணியளவில், ஆறுமுகம் என்பவர், எனக்கு போன் செய்து இராசிபுரம் - ஆத்தூர் ரோட்டில் ஈச்சம்பட்டி அருகில் ரோட்டை கடந்து சென்ற 70 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபர் மீது, அரசுப்பேருந்து மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், அதில் அவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டதாகவும் தகவல் சொன்னார். விபத்து ஏற்படுத்திய அரசுப்பேருந்தின் பதிவு எண். TN 30 N 1478 ஆகும்.

2) நடந்த சம்பவத்தை குறித்து மல்லியகரை காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) நான், பைத்துார் தெற்கு காட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். விபத்து குறித்து எனக்கு யார், எப்போது தகவல் சொன்னார்கள் என்றால் வேலாயுதம் மகன் ஆறுமுகம் என்பவர் சம்பவத்தன்று இரவு தகவல் சொன்னார். மேற்படி ஆறுமுகத்தை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்படி நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) மல்லியகரை காவல் நிலையத்திற்கு நான் விபத்து குறித்து எப்போது தகவல் சொன்னேன் என்றால் மறுநாள் காலை சுமார் 07.00 மணியளவில் சம்பவயிடத்தில் விசாரித்துவிட்டு, மல்லியகரை காவல் நிலையத்திற்கு சென்றேன். விபத்து எங்கே நடந்தது என்றால் விஸ்வநாதன் என்பவரின் வீட்டிற்கு அருகே நடந்தது. நான் சம்பவயிடத்திற்கு செல்லும்போது இறந்தவரின் பிரேதமோ, பேருந்தோ அங்கு இல்லை என்றால் சரிதான்.

3) சம்பவயிடத்தில் இரத்தக்கரை இருந்ததா என்றால் இல்லை. புகார் மனுவினை யார் எழுதினார்கள் என்றால் நான்தான் எழுதினேன். புகார் மனு கொடுத்த பின்னர், போலிசார் மீண்டும் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. போலிசார் சொல்ல சொல்லத்தான் புகாரினை நான் எழுதினேன் என்றால் நான் விசாரணை செய்ததன் அடிப்படையில் தான் புகாரினை எழுதினேன். நான் யாரை விசாரணை செய்தேன் என்றால் விஸ்வநாதனை விசாரணை செய்தேன்.

4) நடந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த காலகட்டத்தில் இராசிபுரம் – ஆத்துார் சாலையானது புதுப்பிப்பதற்காக பராமரிப்பு பணி செய்துகொண்டிருந்தார்கள் என்றும், ரோட்டின் ஒருபுறமாகத்தான் வாகனங்கள் சென்றுவந்துகொண்டிருந்தன என்றும் சொன்னால் சரிதான்.

5) விபத்தில் இறந்த நபரின் பெயர், விலாசம் தெரியுமா என்றால் தெரியாது. விபத்தில் இறந்த நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. நான் மல்லியகரை காவல் நிலையத்திற்கு விபத்து நடந்த மறுநாள் சென்று புகாரினை கொடுத்ததாகவும், சம்பவயிடத்தில் சாட்சிகளை விசாரித்து தெரிந்துகொண்டதாகவும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்தானது இறந்த நபர் மனநலம் பாதிக்கப்பட்ட காரணத்தினால் கவனக்குறைவாக ரோட்டினை கடந்துசெல்லும்போதுதான் விபத்து ஏற்பட்டது என்றும், எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 11.19

ஒம்/—S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.144/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-4)***

*Name / Father's Name:* ***திரு.முருகேசன் த/பெ. பழனிவேல்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.03.2024.**

துவக்க நேரம் 11.20

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது நடுவலூர், எம்.பி நகரில் குடியிருந்து வருகிறேன். அரசுப்பேருந்தின் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.01.2022ம் தேதி இரவு சுமார் 09.00 மணியளவில், நானும், ஆஜர் எதிரியும் TN 30 N 1478 என்ற பதிவெண் கொண்ட அரசுப்பேருந்தில் ஈரோடு-கள்ளக்குறிச்சி நோக்கி வந்துகொண்டிருந்தபோது, மோட்டூர் அருகே ரோடு வேலை செய்துகொண்டிருந்ததால் ரோட்டின் இடதுபுறமாக நாங்கள் சென்றுகொண்டிருந்தோம்.

2) அப்போது அடையாளம் தெரியாத சுமார் 70 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபர் ரோட்டின் வலது பக்கத்திலிருந்து திடீரென வந்து, எங்களது அரசுப்பேருந்தின் முன்பாக விழுந்து, அதில் அவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். பேருந்தின் ஓட்டுனர் பிரேக் பிடித்தும், அவர் மீது மோதிவிட்டது. நாங்கள் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி, இறந்த நபரின் பிரேதத்தை அனுப்பிவைத்தோம். சம்பவயிடத்திற்கு வந்த போலிசார் நடந்த சம்பவம் குறித்து, என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று அருகில் இருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். விபத்தானது இறந்த நபரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றும், எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 11.30

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.144/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-5)***

*Name / Father's Name:* ***திரு.வருணன் த/பெ. பெருமாள்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.03.2024.**

துவக்க நேரம் 11.31

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மோட்டூரில் குடியிருந்து வருகிறேன். நான் போர்வெல் வண்டி வைத்து வேலை செய்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம், தேதி, மாதம் நியாபகம் இல்லை. ஒருநாள் இரவு சுமார் 09.00 மணியளவில், நான் மோட்டூரில் உள்ள எனது வீட்டில் இருந்தபோது, அரசுப்பேருந்து மோதி, அடையாளம் தெரியாத வயதான ஒரு நபர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள்.

2) நான் சென்று ரோட்டில் பார்த்தபோது, அரசுப்பேருந்து நின்றிருந்தது. ஒருவர் இறந்த நிலையில் கிடந்தார். அவரை நானும், அருகில் இருந்தவர்களும் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி, வரவழைத்து, அதில் இறந்த நபரின் பிரேதத்தை அனுப்பிவைத்தோம். சம்பவயிடத்திற்கு வந்த போலிசார் நடந்த சம்பவம் குறித்து, என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நடந்த விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 500 அடி தூரம் இருக்கும். நான் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை.

முடிவு நேரம் 11.36

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.